மனனம் செய்ய
இந்த வார வசனம்:

“உமது திருவுத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன்.”
(எபி.10:9)

மனுவுரு எடுத்திருக்கும் கிறிஸ்துவுக்கு நாம் எவ்வாறு மறுமொழி கூற போகிறோம் என்பதே இப்போதைய கேள்வியாகும்?

இறை ஆற்றலும் மாட்சியுமிக்க ஒருவர் பெத்லேகமில் பிறப்பார் என மிக்கா இறைவாக்குரைத்திருக்கிறார். அவர் படைப்புக்கு முன்பே இருப்பவர். இஸ்ராயேலரின் தூயவரான அவர், உலகமெங்கும் அறியப்பட்டு தம் மக்களை வழிநடத்தும் வாக்களிக்கப்பட்ட ஆட்சியாளர். அம்மக்கள் அமைதியும் பாதுகாப்பும் பெறுவர். அவரே அமைதி என அழைக்கப்படுவார். அவர் உலகத்திற்கு வந்த போது அவர்கள் தவற விட்டனர். அவர்களைப் போல் நாமும் அவரைத் தவற விடப்போகிறோமா?

தந்தையின் திருவுளப்படி நடந்த நமதாண்டவரின் கீழ்படிதல் பற்றி எபிரேயர்க்கு எழுதிய கடிதத்தில் அதன் ஆசிரியர் எழுதியுள்ளார். சிலுவையில் தொங்கி தமது உயரிய தியாகத்தால் நமக்கெல்லாம் மீட்பளித்தார். அந்த தியாகப் பலியால் மட்டுமல்ல, இயேசு தமது வாழ்க்கை முழுவதுமே இறை பரிவிரக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இறைமகனை கருத்தாங்க அன்னை மரியாள் ஒப்புக் கொண்டதற்கு அவரது கீழ்படிதலே காரணம். “நான் ஆண்டவரின் அடிமை” என அவர் பதிலளித்தார். அவர் மீது நிழலாடி இறையருள் எதிர்காலம் குறித்த அவரது அச்சத்தைப் போக்கியது. மரியாள் வந்த போது ஆண்டவரின் தாய் என்பதை எலிசபெத் அடையாளம் கண்டு கொண்டதும் இறையருளாலே. அவரது வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத், மரியாள் பற்றி மூன்று அம்ச பிரகடனத்தை அறிவித்தார். “பெண்களுக்குள் ஆசீர் பெற்றவர்”, “மரியாள் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே”, “கடவுளின் வார்த்தையை நம்பியவர் பேறுபெற்றவர்”. இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் ஆசீர் பெற்றவர். **நமது கீழ்ப்படிதலான வாழ்க்கை வெறும் எண்ணங்களாலும் ஆசையாலும் அல்லாமல் அன்பால் அமைய வேண்டும்.** பிறருக்கு செய்யும் சேவையால் அவர்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதனால் இயேசுநாதர் உலகத்திற்கு வந்து நம்மோடு வாழ்ந்தார் என்பதை அவர்களும் நம்புவார்கள்.

**இன்றைய வாசகங்கள்:**

மீக். 5: 1-4;
திபா. 79: 2-3, 15-16, 18-19;
எபி. 10: 5-10;
லூக். 1: 39-44

INTERNAL CIRCULATION ONLY
BUL 51/2021
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

19 டிசம்பர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH
திருவருகை காலம் 4ம் ஞாயிறு

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:
**அஞ்சாதீர்கள், நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்**



# கீழ்படிதலால் அன்னை மரியாள் ஒப்புதல் தெரிவித்தார்

பெரும் எதிர்பார்ப்பைக் கொண்டது திருவருகை காலம். கிறிஸ்மஸ் நெருங்கி வருவதால், பெத்லேகமை நோக்கி நமது எண்ணங்கள் பறக்கும். ஏனெனில் மாபெரும் நிகழ்வு நடக்கப்போவதாக இறைவாக்கு உரைக்கப்பட்டுள்ளது. காத்திருக்கும் அந்த நிகழ்வானது நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு தெரிந்த ஒன்று. அது நமக்கு வியப்பல்ல. ஆனால் மெசியா